P.R. 108 DT. 18.08.2011

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 18.8.2011

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், மணப்பாறை - குளித்தலை சாலையில் 10.8.2011 அன்று காலை வேலைக்குச் செல்லும் பொருட்டு சாலை ஓரத்தில் நின்று கொண்டிருந்தவர்கள் மீது எதிர்பாராத விதமாக காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அவர்களின் வாகனம் மோதியதில் மொண்டிப்பட்டி கிராமம், களத்துப்பட்டியைச் சேர்ந்த திரு. கருத்தான் என்பவரின் மகன் திரு. சரவணன் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். மேலும், இந்தச் சம்பவத்தில் மொண்டிப்பட்டி கிராமம், களத்துப்பட்டியை சேர்ந்த திரு. வீரபத்திரன் மகன் திரு. ஜெயக்குமார் மற்றும் திரு. ரெங்கசாமி மகன் திரு. சதீஷ் ஆகியோர் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தனர்.

படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வந்த திரு. வீரபத்திரன் மகன் திரு.ஜெயக்குமார் சிகிச்சை பலனளிக்காமல் 11.8.2011 அன்று காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிக்க துயருற்றேன்.

இந்த விபத்தில் அகால மரணமடைந்த திரு. ஜெயக்குமாரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திரு. கருத்தான் என்பவரின் மகன் திரு. சரவணன் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஏற்கெனவே ஒரு லட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்க உத்தரவிட்டுள்ள நிலையில் மேலும் அவரது குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாயும், 11.8.2011 அன்று உயிரிழந்த திரு. ஜெயக்குமாரின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்